(6 pages)

# 1003/1R1/LTAM01 NOVEMBER 2016

## இக்காலக் கவிதையும் சிறுகதையும்

(For those who joined in July 2010 and after)

Time : Three hours Maximum : 100 marks

I. ஒரு சொல்/தொடரில் விடை தருக : நிரப்புக : (10 × 1 = 10)

1. அடித்தது போதும் அணைத்துக் ———— வேண்டும்.

2. வேதநாயகம் பிள்ளையைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட ———— நூல்.

3. செல்வம் மிகுந்து விளங்கும் நன்னகர் ————.

தகுந்த சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

4. முருகப் பெருமானுக்குப் பூவும் பாலும் கொண்டு காவடி எடுப்போர் பாடுவது

(அ) குறவஞ்சி (ஆ) காவடி சிந்து

(இ) உலா (ஈ) பிள்ளைத் தமிழ்

5. வானவில் கவிதையை பாடியவர் யார்?

(அ) காமராசன் (ஆ) ந. பிச்சமூர்த்தி

(இ) மேத்தா (ஈ) வைரமுத்து

6. "பால்வீதி" என்ற கவிதைத் தொகுதி மூலம் இனங்காட்டி கொண்டவர் யார்?

(அ) வைரமுத்து (ஆ) மேத்தா

(இ) அப்துல் ரகுமான் (ஈ) மீரா

ஒரு சொல்/தொடரில் விடை தருக :

7. பெண் குழந்தைக்கும் ஆண் குழந்தைக்கும் தனித்தனியே தாலாட்டுப் பாடியவர் யார்?

8. "முதல் தேதி" கவிதையை படைத்தவர் யார்?

9. வெள்ளரிக்காய் வெம்பி விட்டால் எதற்குப் பயன்படாது?

10. "அன்புக்கு மரணம் இல்லை" யாரைப் பற்றியது? எழுதியவர் யார்?

II. ஒரு பக்க அளவில் விடை தருக : (3 × 5 = 15)

11. (அ) மழைப் பாடல், தாலாட்டுப் பாடல் – விளக்குக.

(அல்லது)

(ஆ) உற்பத்தியின் சிறப்பை ந. பிச்சமூர்த்தி கவிதை வழி விளக்குக.

12. (அ) தமிழ் மொழிக்குப் பணி செய்ய பாரதிதாசன் இளந் தமிழனுக்கு இட்ட கட்டளை யாது?

(அல்லது)

(ஆ) "கதவு" சிறுகதையை திறனாய்வு செய்க.

13. (அ) "குடும்பத்தில் ஒரு நபர்" சிறு கதையின் சமூகச் சிந்தனையை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'நெருப்பு' சிறுகதையின் அமைப்பினை எடுத்துரைக்க.

III. ஒரு பக்க அளவில் விடை தருக : (1 × 5 = 5)

14. (அ) குற்றியலிகரம், ஒற்றளபெடை குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) மொழிக்கு முதல் எழுத்துக்கள் குறித்து எழுதுக.

IV. இரு பக்க அளவில் விடை தருக : (2 × 10 = 20)

15. (அ) "சார்பெழுத்துக்கள்" குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) புதுக்கவிதையில் படிமம், குறியீடு குறித்துச் சான்றுகளுடன் விளக்குக.



16. மொழியாக்கம் தருக :

(அ) Sub Registrar

(ஆ) Research Scholar

(இ) Orphanage home

(ஈ) Stadium

(உ) Paper valuation

(ஊ) Journalism

(எ) Epigraph

(ஏ) Translation

(ஐ) Money Order

(ஒ) Director

(ஓ) College Studies.

V. இரு பக்க அளவில் விடை தருக : (3 × 10 = 30)

17. (அ) புலமையிலக்கணம் குறித்த கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தொழில் பாடல்களின் கோலாட்டப் பாடல்களின் சிறப்புகளைப் புலப்படுத்துக.

18. (அ) ஜடாயு சிறுகதை தோன்றிய் கதைப் பின்புலத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பலாப்பழம் சிறுகதையை திறனாய்வு செய்க.

19. (அ) "அன்புக்கு மரணம் இல்லை" கண்ணதாசன் கூறும் உருக்கமான கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) "சிநேகம்" சிறுகதையை திறனாய்வு செய்க.

VI. ஏதேனும் ஒன்றனுக்கு இரண்டு பக்க அளவில் விடை தருக : $(10 \times 1 = 10)$

20. (அ) அம்பை, ஜெயகாந்தன் குறிப்பு வரைக.

(ஆ) வல்லிக் கண்ணன், சுந்தர ராமசாமி விளக்குக.

(இ) சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி விவரி.



VII. ஏதேனும் ஒரு கருப்பொருளில் இரண்டு பக்க அளவில் சிறுகதை படைக்கவும் : $(10 \times 1 = 10)$

21. (அ) மனித நேயம்

(ஆ) உழைப்பே உயர்வு

(இ) வேற்றுமையில் ஒற்றுமை காண்பது.

———————

(ஆ) (i) நார்முடிச் சேரலின் திட்டமிடும் ஆற்றலை விளக்கி வரைக.

(அல்லது)

(ii) அருளாழியின் பாத்திரப் படைப்பு குறித்து விளக்குக.

(இ) (i) 'ஒன்று மொழிக் கோசர்' இயல்பு 'அணிச்ச அடி'யில் எவ்வாறெல்லாம் விளக்கப்படுகிறது?

(அல்லது)

(ii) 'வாரணமாயிரம்' பாசுரங்களின் வழி ஆண்டாள் தம் திருமணச் சடங்கு முறைகளை எங்ஙனம் விளக்ககிறாள்?

6. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றிற்கு இரண்டு பக்க அளவில் விடை தருக :- $(1 \times 10 = 10)$

(அ) பன்னிரு திருமுறைகள் குறித்துக் கட்டுரை வரைக.

(ஆ) பன்னிரு ஆழ்வார்களின் சயைப் பணியைக் குறிப்பிடுக.

(இ) தமிழில் இசை நாடகங்களின் வரலாற்றினை விளக்குக.

7. பின்வரும் கருப்பொருளிகளில் ஒன்று குறித்து இரண்டு பக்க அளவில் ஓரங்க நாடகம் படைக்கவும் : $(1 \times 10 = 10)$

(அ) மழை நீர் சேகரித்தல்

(ஆ) கள் குடித்தலால் ஏற்படும் விளைவு

(இ) தொலை பேசித் தொல்லை.



# 1004/1R2/LTAM02 NOVEMBER 2016

## பக்தி இலக்கியமும் நாடகமும்

(For those who joined in July 2003 and after)

Time : Three hours Maximum : 100 marks

1. ஒரு சொல் / தொடரில் விடையளிக்கவும் : $(10 \times 1 = 10)$

நிரப்புக :

(அ) மாசறு ________ முடிமேல் அணிந்தென்

(ஆ) சீர்மை உடையவர்கள் வாழும் ஊர் ________.

(இ) நந்த கோபாலன் மகனாகப் பிறந்தவர் ________.

தக்க சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(ஈ) திருப்பாவை பாடியவர் யார்?

(i) ஆண்டாள்

(ii) மாணிக்கவாசகர்

(iii) சிவப்பிரகாசர்

(உ) சிவப்பிரகாசர் எந்த சமயத்தைச் சார்ந்தவர்?

(i) வைணவம்

(ii) சமணம்

(iii) வீரசைவம்

(ஊ) இரட்சணிய யாத்திரகம் எத்தனை பருவங்களைக் கொண்டது?

(i) ஆறு

(ii) ஏழு

(iii) ஐந்து

ஒரு சொல் / தொடரில் விடை தருக.

(எ) கோளாறு பதிகம் பாடியவர் யார்?

(ஏ) சுந்தரர் தேவாரம் எத்தனை யாவது திருமுறை?

(ஐ) உமறுப்புலவர் பிறந்த ஊர் எது?

(ஒ) தன்னைத் தடுத்தாட்கொண்ட தாய்க் குறிப்பிடும் சிவனடியார் யார்?

2. ஒரு பக்க அளவில் விடை தருக : (3 × 5 = 15)

(அ) (i) திருஞானசம்பந்தர் அடியவர்க்கு எவை எவை தீமை செய்வதில்லை எனக் குறிப்பிடுகிறார்?

(அல்லது)

(ii) திருவெண்ணெய் நல்லூர்ப் பதிகத்தின் வழி பக்தி திறத்தினை புலப்படுத்துக.

(ஆ) (i) நன்னனின் அவையில் நடந்த வழக்கினை விளக்குக.

(அல்லது)

(ii) கோட்புலி, 'அனிச்ச அடி'யில் படைக்கப்பட்டதேன்? விளக்குக.

(இ) (i) ஆண்டாள் கண்ட கனவினை சுருக்கித் தருக.

(அல்லது)

(ii) மிஞிலியின் சூழ்ச்சித் திறனை விளக்குக.



3. ஒரு பக்க அளவில் விடை தருக : (1 × 5 = 5)

(அ) ஒற்றெழுத்து மிகா இடங்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒற்று, தொடர்ப் பிழைகளும் திருத்தமும் பற்றி சான்றுடன் விளக்குக.

4. இரு பக்க அளவில் விடை தருக : (2 × 10 = 20)

(அ) (i) ல,ழ,ள வேறுபாடுகளை சான்றுகளுடன் விவரிக்க.

(அல்லது)

(ii) சொற்கள் தொடராகும் போது ஏற்படும் மாற்றங்களை சான்றுகளுடன் விவரி.

(ஆ) பின்வரும் வாக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்க்கவும் :

(i) A thing of beauty is a joy for ever

(ii) Love is better than riches and wisdom

(iii) A poet must not be in a hurry to publish his work

(iv) All that glitter is not gold

(v) A poem is a harmony.

5. இரண்டு பக்க அளவில் விடை தருக : (3 × 10 = 30)

(அ) (i) திருநாவுக்கரசரின் நிலையாமையையும் சிவபக்தியையும் எடுத்துரைக்க.

(அல்லது)

(ii) குலசேகர ஆழ்வாரின் ஆழ்ந்த பக்தி திறத்தை விவரிக்கவும்.

(6 pages)

# 1005/1R3/LTAM03 NOVEMBER 2016

காப்பிய இலக்கியமும் புதினமும்

---

(For those who joined in July 2010 and after)

Time : Three hours Maximum : 100 marks

1. ஒரு சொல்/தொடரில் விடை தருக. நிரப்புக :

(10 × 1 = 10)

(அ) நாளுநாட் ———— நமக்கு நாமழுதெ தென்னே.

(ஆ) ———— கண்டார் நிலத்தினின்றேறப் பாய்ந்தார்.

(இ) இறந்த மகனை எடுத்து வந்தவள் ————.

தகுந்த சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(ஈ) மண நூல் என்று அழைக்கப்பட்ட காப்பியம் எது?

(i) சிலப்பதிகாரம்

(ii) சீவகசிந்தாமணி

(iii) மணிமேகலை

(iv) கம்பராமாயணம்.

(உ) 'தொண்டர் சீர் பரவுவார்' என்ற சிறப்புக்குரியவர் யார்?

(i) மாணிக்கவாசகர்

(ii) அப்பர்

(iii) ஞானசம்பந்தர்

(iv) சுந்தரர்.

(ஊ) வளையாபதி எதைத் தவிர்க்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது?

(i) பொய் சொல்வதை

(ii) அன்பை

(iii) ஆசையை

(iv) கவலையை.

ஒரு சொல்/தொடரில் விடை தருக.

(எ) மணி பல்லவத்தீவிலிருந்து புத்தபீடிகை நிலத்திலிருந்து எவ்வளவு அடி உயரத்தில் அமைந்துள்ளது?

(ஏ) கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர் யார்?

(ஐ) இராமன் முடிசூட இருப்பதைக் கூனி யாரிடம் கூறினாள்? கேட்டவள் என்ன பரிசு கொடுத்தாள்?

(ஒ) செங்கீரைப் பருவம் - பொருள் தருக.

2. ஒரு பக்க அளவில் விடை தருக. (3 × 5 = 15)

(அ) (i) கண்ணகி கண்ட கனவு யாது? விளக்குக.

(அல்லது)

(ii) மாந்தரையின் பண்பு நலன்களை எடுத்து எழுதுக.

(ஆ) (i) முத்துகுமாரசாமி பிள்ளைத் தமிழ் பற்றி விளக்குக.

(அல்லது)

(ii) நந்திவர்ம மன்னன் பால் காதல் கொண்ட நங்கை ஒருத்தியின் புலம்பலை எழுதுக.

(இ) (i) ‘ஆயிஷா’ பாத்திரப்படைப்பை விளக்குக.

(அல்லது)

(ii) ஒரு கடலோரக் கிராமத்துக் கதை நாவல் வட்டார நாவலா? விளக்குக.



3. ஒரு பக்க அளவில் விடை தருக. (1 × 5 = 5)

(அ) வெண்பாவின் வகைகளை எடுத்துக் கூறி விளக்குக.

(அல்லது)

(ஆ) தற்குறிப்பேற்ற அணியை சான்றுடன் விளக்குக.

4. இருபக்க அளவில் விடை தருக. (2 × 10 = 20)

(அ) (i) ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் கூறி அதன் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ii) சிலேடையணி, உருவக அணி இவற்றைச் சான்றுடன் விளக்குக.

(ஆ) நும் ஊருக்குக் குடிநீர் வசதி வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு ஒரு விண்ணப்பக் கடிதம் வரைக.

5. இருபக்க அளவில் விடை தருக. (3 × 10 = 30)

(அ) (i) சாத்தனின் இயல்பும் இல்லற வாழ்க்கையும், தேவந்தியின் செயலும் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ii) கண்ணப்ப நாயனாரின் பக்தித் திறத்தைப் பற்றி விவரிக்க.



[P.T.O.]

(ஆ) (i) கலிங்கத்துப்பரணியில் இடம் பெற்றுள்ள செய்திகளை விவரிக்க.

(அல்லது)

(ii) நும்பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள பிள்ளைத் தமிழ் பருவத்தினை விவரிக்க.

(இ) (i) ஒரு கடலோரக் கிராமத்துக் கதை புதினத்தின் கதை அமைப்பினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ii) "அகமது கண்ணு" பண்பு நலன்களையும் செயல்களையும் தொகுத்துரைக்க.

6. ஏதேனும் <u>ஒன்றிற்கு</u> இரண்டு பக்க அளவில் விடை தருக : (1 × 10 = 10)

(அ) ஐஞ்சிறு காப்பியங்கள் பற்றி எழுதுக.

(ஆ) பக்தி இலக்கியத் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விளக்குக.

(இ) புதினத்தின் வகைகள் பற்றி விவரிக்க.



7. பின்வரும் கருப்பொருளில் ஏதேனும் ஒன்றிற்கு <u>இரண்டு பக்க</u> அளவில் புது கவிதை படைக்கவும் : (1 × 10 = 10)

(அ) "முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்".

(ஆ) ஏக்கம்.

(இ) விடியுமா?

(6 pages)

# 1006/1R4/LTAM04 NOVEMBER 2016

## பண்டைய இலக்கியமும் உரைநடையும்

(For those who joined in July 2003 and after)

Time : Three hours | Maximum : 100 marks

I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (10 × 1 = 10)

நிரப்புக :

1. பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தினைப் பாடியவர் ________

2. கடல் அணிந்தன்று அவர் ஊரே ________

3. ________ யார் ஆகியனே

தகுந்த சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

4. முல்லைப்பாட்டின் ஆசிரியர் யார்?

(அ) நப்பூதனார் (ஆ) குமட்டுக் கண்ணனார்

(இ) பேயனார் (ஈ) மருதனிள நாகனார்

5. பாலைத் திணைக்குரிய உரிப்பொருள்

(அ) பிரிதல் (ஆ) ஊடல்

(இ) இருத்தல் (ஈ) புணர்தல்

6. குறிஞ்சித் திணை பாடியவர் யார்?

(அ) பேயனார் (ஆ) மருதனிள நாகனார்

(இ) கபிலர் (ஈ) பரணர்

ஒரு சொல் தொடரில் விடை தருக :

7. தொகை நிலை என்றால் என்ன?

8. நாலடியார் குறிப்பிடும் கருத்து யாது?

9. நம் பூந்தோட்டத்துத் தேன் மயங்கு பாலினும் இனியது எது?

10. வாகைத்திணை என்றால் என்ன?

II. ஒரு பக்க அளவில் விடை தருக : (3 × 5 = 15)

11. (அ) நும் பாடப்பகுதியில் அமைந்துள்ள தும்பைத் திணைப் பாடற் கருத்தைச் சுருக்கமாக எழுதுக.

(அல்லது)

(ஆ) கானப் பேரையில் கடந்த வாகைத் திணையை விளக்குக.

12. (அ) பாணக்கலி, பாடிய பெருங்கோவின் பாடலில் கருத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) வீரமா முனிவரின் தமிழ்த்தொண்டினை எடுத்துரைக்க.

13. (அ) நாட்டுப்புறப் பாடல்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) இளம் பூரணரின் உரைத்திறம் பற்றி விளக்குக.

III. ஒரு பக்க அளவில் விடை தருக : (1 × 5 = 5)

14. (அ) உரிச்சொல்லின் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) வேற்றுமை உருபுகள் எத்தனை? அவற்றில் ஐந்தாம் வேற்றுமை உருபு தரும் பொருள்களை எடுத்துரைக்க.



IV. இருபக்க அளவில் விடை தருக : (2 × 10 = 20)

15. (அ) நெய்தல், முல்லை இரண்டு திணைக்குரிய முதல் கருப்பொருள்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) வெட்சித்திணை, உழிஞைத்திணை இவற்றின் இலக்கணத்தைச் சான்றுகளுடன் விளக்குக.

16. மொழியாக்கம் தருக :

In the Government order first read above orders were issues permitting the management of non minority college to fill up 10% of the seats at their discretion subject to the eligibity of the conditions prescribed by the university concerned for admission procedure for the academic year 1996 – 97 only. The Government direct this concession be extended to the academic year 1997 – 98 also subject to the conditions already prescribed as above.

The government direct further that in respect of minority private colleges the orders contained in para 3 of the G.O. Second read above the deleted and the satus gup prior to the issue of the G.O second cited be maintained.

V. இரு பக்க அளவில் விடை தருக : (3 × 10 = 30)

17. (அ) கல்வி குறித்து நாலடியார் கூறும் கருத்துக்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் போர்த்திறலை விளக்கிக் கட்டுரை வரைக.

18. (அ) ஐங்குறு நூற்றுப் பாடல்களில் அமைந்துள்ள அகத்தினை மரபைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) 'ஒப்புறவறிதல்' குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களை விவரிக்க.

19. (அ) 'கண்டேன் கொள்ளிப்பிசாசை' என்ற தலைப்பில் பிலோ இருதயநாத் கூறும் செய்திகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) 'பயண இலக்கியம்' பற்றி சோமலே குறிப்பிடும் செய்திகளை தொகுத்துரைக்க.



VI. ஏதேனும் ஒன்றிற்கு இரண்டு பக்க அளவில் விடைதருக : (1 × 10 = 10)

20. (அ) நீதி இலக்கியங்கள்

(ஆ) எட்டுத் தொகை நூல்கள்

(இ) சங்க காலம் பொற்காலம் என்பார் கூற்றை ஆராய்க.

VII. ஏதேனும் ஒன்றினுக்கு இரு பக்க கட்டுரை வரைக : (1 × 10 = 10)

21. (அ) இன்றைய திரையிசை பாடல்களில் தமிழுணர்வு

(ஆ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு

(இ) தொழிற்கல்வியின் நன்மைகள்.

---